UNIVERSITY OF CAMBRIDGE INTERNATIONAL EXAMINATIONS
General Certificate of Education Ordinary Level

**TAMIL** **3206/02**

Paper 2 Translation and Reading Comprehension **May/June 2010**

**1 hour 30 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

*7658823144*

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your Centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen.
Do not use staples, paper clips, highlighters, glue or correction fluid.

Answer **all** questions.

At the end of the examination, fasten all your work securely together.
The number of marks is given in brackets [ ] at the end of each question or part question.

This document consists of **4** printed pages and **4** blank pages.

DC (CW/PM) 21357/6
© UCLES 2010

UNIVERSITY *of* CAMBRIDGE International Examinations

**[Turn over**

www.theallpapers.com

**BLANK PAGE**

© UCLES 2010

www.theallpapers.com

## Section A – Translation

**1** Translate into **English**.

இந்தக் காலத்தில் உலகம் முழுவதும் மக்கள் பிரயாணம் செய்வதற்குக் காரைப் பயன்படுத்துகின்றனர். 19-ம் நூற்றாண்டின் இறுதியில் தான் முதன்முதலாக கார்கள் வந்தன. அந்தக் காலத்தில் கார்கள் அதிகம் இல்லாதபடியால், தெருவில் மற்றவர்களை எச்சரிப்பதற்கும் காரின் முன்னால் சிவப்புக் கொடியைக் காட்டிக் கொண்டு போவதற்கும் ஒரு ஆளை நியமித்தனர். 1885-ம் ஆண்டில் வந்த முதல் காரில் மூன்று சக்கரங்கள் மட்டுமே இருந்தன. அந்தக் காலத்தில் கார்கள் ஒரு மணிக்கு நான்கு மைல்கள் வேகத்தில் தான் போகலாம். 1900-ம் ஆண்டு முதல் கார்கள் மிகவும் பிரபலமாகி விட்டன. வேலை செய்பவர்கள் தங்களுக்கு என்று கொடுத்த வேலையை மட்டும் தான் செய்ய வேண்டும். ஒருவர் ஒரு வேலையை முடித்தவுடன் அடுத்த ஆள் அடுத்த வேலையைச் செய்ய வேண்டும். இப்படி அஸெம்பிளி லைனில் (பாகங்களை இணைத்து) வேலை செய்தபடியால் உற்பத்தி அதிகம் ஆயிற்று. விலைகள் குறைய ஆரம்பித்தன. ஹென்றி போர்டின் மோட்டார் கம்பெனியால் 93 நிமிடங்களில் ஒரு காரைச் செய்ய முடிந்தது. இதனால் ஹென்றி போர்டின் மோட்டார் கம்பெனி உலகத்திலேயே பெரிய மோட்டார் உற்பத்தி செய்யும் ஒரு கம்பெனியாக வந்தது.

[10]

**2** Translate into **Tamil**.

The paddy fields were muddy after the heavy rains and many of the tall plants were lying flat on the ground. A boy stepped lightly through the puddles, making sure as he placed his toes down that he could feel the solid ground beneath him. Earlier in the day, he had watched his friend skip through the field in a hurry, and fall waist deep into a small pool of water.

He wanted to go and see what state the railway track was in at the other side of the field. The train that goes between the big cities passes this point twice a week, just after midday. The service had been disrupted by heavy rains that had submerged part of the track.

As he went into the field that the track passed through, he noticed that the track was not even visible. He had to wade almost knee deep through the water. In the distance, he heard the sound of an engine. There was no doubt that the train was on its way. He watched anxiously.

As the sound grew louder, he saw the train appear in the distance. Ahead of him, he could still see no track. The engine rounded a corner and he watched as mud splashed up over two metres high onto the windows of the train. Seconds later, the front of the train sped past him and the carriages followed behind. Today, there were no problems.

[20]


www.theallpapers.com

## Section B – Reading Comprehension

Read the following passage carefully and then answer the questions in **Tamil**.

### கொலொசியம்

கொலொசியம் இத்தாலியின் தலைநகரமான ரோமில் இருக்கிறது. இது சரித்திரப் புகழ் பெற்ற ஒரு பழைய பெரிய கட்டடம். இக்கட்டடத்தின் நடுவில் ஒரு பெரிய மரத்தினால் கட்டிய மேடை (அரங்கம்) இருக்கிறது. இதைச் சுற்றிலும் 50000 மக்கள் உட்காரக்கூடிய வசதிகள் இருந்தன. இந்த அரங்கத்தில் வரலாற்றுப் புகழ்பெற்ற சண்டைகள் நடந்தன. இந்தச் சண்டையில் இரண்டு பேர் சண்டை போட்டு மக்களை மகிழ்விப்பார்கள். சில சமயங்களில் சண்டை போடுபவர்களை மிருகங்களோடு சண்டை போடச் செய்வார்கள். இந்தக் கட்டடம் கட்டி கிட்டத்தட்ட 2000 வருடங்கள் ஆகின்றன. இது முழு வட்டமாக இல்லை.

சரித்திர ஆசிரியர்கள், ரோமானிய அரசர் வெஸ்பாஸியன் ஆணையின்படி கிரிஸ்து பிறந்து 70 வருடங்களுக்கு பின்னால் இதைக் கட்ட ஆரம்பித்தனர் என்றும், பத்து வருடங்களில் கட்டி முடித்தனர் என்றும் கருதுகின்றனர். முதல் விளையாட்டு ஆரம்பித்த போது 9000 க்கு மேல் மிருகங்கள் கொல்லப்பட்டதாக ஒரு ரோமானிய சரித்திர வல்லுனர் குறிப்பிட்டுள்ளார். இந்தக் கொலொசியத்தில் சமய சம்பந்தப்பட்ட விழாக்கள், நாடகங்கள், விளையாட்டு நிகழ்ச்சிகள் 500 ஆண்டுகளுக்கு மேலாக நடந்து வந்தன.

இதன் நடுவில் உள்ள அரங்கத்தின் கீழே பல அறைகளும் வழிகளும் இருந்தன. இந்த அறைகளில் மிருகங்களையும் அடிமைகளையும் அடைத்து வைத்து இருந்தனர். ஒரு உரிமையும் இல்லாத இந்த அடிமைகளை உண்மையான போட்டி நடப்பதற்கு முன்னால் சண்டை போடச் செய்வார்கள். தூண்களையும் வளைவுகளையும் சுற்றி படிப்படியாக உட்காரும் இடங்கள் கொலொஸியத்தைச் சுற்றிலும் கட்டப்பட்டு இருந்தன. மக்கள் ஒழுங்காகவும் பத்திரமாகவும் போவதற்காகச் சுற்றிலும் 80 கதவுகள் இருந்தன.

ரோமானிய அரசு விழுந்தபிறகு முதலில் இந்தக் கட்டடம் கவனிப்பார் இல்லாமல் இருந்தது. பிறகு இந்த நாடு ஒரு மத்தியகாலத்தில் இருந்த ஒரு குலத்தினால் ஆளப்பட்டு வந்தது. இவர்கள் இதைத் தங்கள் கோட்டையாகப் பயன்படுத்தினர். இந்தக் காலத்தில் கட்டடப்பொருட்களைக் கொள்ளை அடிக்கவும் ஆரம்பித்தனர். சில சமயங்களில் கிறிஸ்தவ வழிபாட்டிற்கும் பயன்படுத்தினர்.

இந்தக் காலத்தில் இந்தக் கட்டட நிர்மாணக்கலையைப் பார்ப்பதற்கு ஆயிரக்கணக்கான மக்கள் வருகின்றனர். புனித வெள்ளிக்கிழமையன்று போப்பாண்டவர், மக்களைக் கொலொசிய மேடைக்குக் கூட்டிக்கொண்டு வந்து கொண்டாடுவார். இக்காலத்தில் கொலொசியம் மிகவும் பிரபலமாக இருப்பதால், சரித்திர வல்லுனர்கள் வருங்கால சந்ததியினருக்கு எப்படி இன்னும் இதை சேதம் அடையாமல் பாதுகாக்க வேண்டும் என்று யோசனை செய்கின்றனர்.

© UCLES 2010



www.theallpapers.com

Now answer the following questions in **Tamil** using your own words as far as possible:

1 கொலொசியம் என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது? [2]

2 எந்த விதமான இரண்டு எதிரிகள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டனர்? [2]

3 மக்களை மகிழ்ச்சி ஊட்டுவதற்குப் பலவித மிருகங்களைப் பயன்படுத்தி இருக்கிறார்கள் என்பதை ஆசிரியர் எவ்வாறு எடுத்துக்காட்டுகிறார்? [2]

4 ரோமானியர் காலத்தில் விளையாட்டைத் தவிர, வேறு எந்த இரண்டு நிகழ்ச்சிகளுக்குக் கொலொசியத்தைப் பயன்படுத்தினார்கள் என்று எழுதவும். [2]

5 ஏன் அடிமைகளை சண்டை போடுவதற்குப் பயன்படுத்தினார்கள்? [1]

6 பார்ப்பவர்களுக்கு ஆபத்துகள் ஏற்படாமல் இருக்க கட்டட வல்லுநர்கள் எவ்வாறு கொலொசியத்தைக் கட்டி உள்ளனர்? [2]

7 மத்திய காலத்தில் இந்தக் கட்டடம் எதற்குப் பயன்பட்டது? [2]

8 சரித்திர ஆசிரியர்கள் கொலொசியத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். ஏன் அப்படிக் கூறுகிறார்கள் என்று நீ நினைக்கிறாய்? [3]

9 ரோமானியர் காலத்திலும், மத்திய காலத்திலும், தற்காலத்திலும் எந்த ஒரு காரணத்திற்காகக் கொலொசியம் பயன்படுத்தப்பட்டது? [1]

10 ரோமானியர் காலத்தில் கொலொசியத்தை எப்படிப் பயன்படுத்தினார்கள்? இதைப் பற்றி உன்னுடைய எண்ணங்கள் என்ன என்பதை இரண்டு காரணங்கள் காட்டி விளக்கமாக எழுதவும். [3]

Language and spelling [5]

**Total Marks [25]**

© UCLES 2010



www.theallpapers.com

**BLANK PAGE**

© UCLES 2010

www.theallpapers.com

**BLANK PAGE**



www.theallpapers.com

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

University of Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.



www.theallpapers.com